# மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளருக்கு எதிரான சுவரொட்டித் தாக்குதல்கள்

*ஒக்டோபர் 16, 2012, கொழும்பு, இலங்கை:* கொழும்பின் சுற்றுப்புறங்களில் ஒக்டோபர் 15, 2012, திங்கட் கிழமையன்று, சிங்கள மொழியில் காணப்பட்ட சுவரொட்டிகளை மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் கடும் விசனத்துடன் நோக்குகின்றது. அச்சுவரொட்டிகளின் தமிழாக்கம் பின்வருமாறு கூறுகின்றது: "நாட்டைப் பிரிப்பதற்கு உதவியும் ஒத்தாசையும் அளிக்கும் பாக்கியசோதிக் கூட்டத்திடமிருந்து குறைந்த வருமானம் பெறுகின்ற பதினைந்து இலட்சம் குடும்பங்களின் வாழ்க்கையைக் கட்டியெழுப்பும் மக்களுக்கான திவிநெகும சட்டத்தைக் காப்பாற்றுவோம்''. சுவரொட்டியின் புகைப்படங்கள் இத்துடன் இணைக்கப் பட்டுள்ளது. மாற்றுக் கொள்கைளுக்கான நிலையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர், கலாநிதி. பாக்கியசோதி சரவணமுத்து அவர்களை இந்த விடயத்தில் இழுப்பதானது, அரசாங்கத்தை விமர்சிப்பவர்களுக்கு எதிரான தற்போதைய அரசியல் வன்முறைச் சூழ்நிலை மற்றும் குற்றம் புரிபவர்களுக்கான குற்றவிலக்களிப்புக் கலாச்சாரம் என்பவற்றின் மீது வலியுறுத்திக் கூறுதலைத் தேவையற்றதாக்குகின்றது. இது, மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் மற்றும் அதன் நிறைவேற்றுப் பணிப்பாளர் மீதான அண்மைய தாக்குதலாகும். இது எந்தவித தயக்கமுமின்றி கண்டிக்கப்படல் வேண்டும்.

சுவரொட்டியில் குறிப்பிடப்பட்ட திவிநெகும சட்டமூலம், தற்போது சட்டவாக்கச் செயன்முறையில் உள்ளதுடன், அதன் அரசியலமைப்புத் தன்மை குறித்து மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் சட்டரீதியான சவால் பின்வருமாறு: ஆகஸ்ட் 10, 2012 அன்று இச்சட்டமூலம் பாராளுமன்ற ஒழுங்குப் பத்திரத்தில் இடப்பட்டபோது, அரசியலமைப்புடன் சட்டமூலம் உடன்படாதுள்ள பல்வேறு உறுதியானதும் மற்றும் நடைமுறைரீதியிலானதுமான காரணிகளை நீதிமன்றத்தின் கவனத்துக்கு கொண்டு வந்து, மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையமும் மற்றும் அதன் நிறைவேற்றுப் பணிப்பாளர் என்ற ரீதியில் கலாநிதி சரவணமுத்து அவர்களும், உயர் நீதிமன்றத்தில் சட்டமூலத்தை எதிர்த்து மனுக்களைத் தாக்கல் செய்தனர். அதிகாரங்களின் வேறாக்குவதற்கான கொள்கை, மாகாண சபைகளுக்கு அதிகாரப் பகிர்வு செய்யப்பட வேண்டிய சில விடயங்களை மீளப் பெறும் சாத்தியம், பொதுநிதி மற்றும் அதன் பொதுவான நிறைவேற்றுதல் மற்றும் அரசாங்கம் கொண்டிருக்கின்ற தகவல்களை மக்கள் பெறும் வழிமுறைகள் என்பவை மீது பாராளுமன்றக் கட்டுப்பாடு உட்பட, சட்டமூலத்தில் எதிர்பார்க்கப்படுகின்ற அரசியலமைப்பு ரீதியாக கரிசனைக்குரிய பல்வேறு விடயங்கள் உள்ளன. இந்த விடயம் உயர்நீதிமன்றத்தின் முன்பாக விசாரணையில் உள்ளதினால் இந்தப் பிரச்சினை குறித்து, இந்த நிலையில் நாம் மேலும் கருத்து தெரிவிப்பதற்கில்லை.

எவ்வாறாயினும், நடவடிக்கைமுறை ரீதியான விடயங்கள் மீது, அரசியலமைப்பில் குறிப்பிட்டவாறு, மாகாணசபைகளின் ஒப்புதலுடன் சம்பந்தப்படுகின்ற விசேட நடைமுறையின் அடிப்படையில் சட்டமாக்கப்படுதலைத் தேவைப்படுத்துகின்ற ஒரு விதத்தில், அதிகாரப் பகிர்வளிக்கப்பட்ட ஒரு தொகை விடயங்கள் மீது சட்டமூலத்தின் உள்ளடக்கம் பாதிப்பை ஏற்படுத்துகின்றது என எங்களது மனுக்களில் ஆரம்பத்தில் வலியுறுத்தப்பட்ட விடயங்களுடன் நீதிமன்றம் இணங்கியது. உயர் நீதிமன்றத்தின் இந்தத் தீர்மானத்தையடுத்து அரசாங்கம் இந்த சட்டமூலத்தை மாகாணசபைகளுக்கு அனுப்பியது. அங்கு, தேர்ந்தெடுக்கப்பட்ட மாகாணசபை இல்லாத வட மாகாணசபை தவிர்ந்த ஏனைய மாகாணசபைகளிடமிருந்து ஒப்புதல்கள் வருகின்றன. தற்போது வட மாகாணசபை சார்பில் ஆளுநரால் வழங்கப்பட்ட ஒப்புதலுக்கு எதிராக யாழ்ப்பாண மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினரொருவரால் சட்டரீதியாக சவால் எழுப்பப்பட்டள்ளது. ஆளுநரின் வகிபாகம் கேள்விக்குட்படுத்தப்பட்டு உயர் நீதிமன்றத்துக்கு பாரப்படுத்தப்பட்டள்ளதையும் கவனத்தில் கொள்ளாது, இச்சட்டமூலம் செப்டெம்பர் 9, 2012 அன்று இரண்டாவது தடவையாக பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையமும் மற்றும் கலாநிதி. சரவணமுத்து அவர்களும் மீண்டும் சட்டமூலத்தைக் கேள்விக்குட்படுத்தியதுடன், இந்த விடயம் இந்த வாரம் உயர் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுக்கப்படவுள்ளது.

இந்தத் தாக்குதல்கள் ஒரு புறமிருக்க, சுவரொட்டிகள் தோன்றிய அதே தினமான ஒக்டோபர் 15, திங்கட் கிழமையன்று இராணுவம் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்துக்கு விஜயம்

செய்தது என்பதையும் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் தெரியப்படுத்துவதற்கு விரும்புகின்றது. இராணுவத்திலிருந்து வந்தவர்கள், தாங்கள் பரிசீலனை செய்கின்ற தேர்தல் திணைக்களத்துடன் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் முகவரி ஒரு தொடர்பைக் கொண்டிருப்பதாக தபால் திணைக்களத்தினால் தங்களுக்குத் தெரிவிக்கப்பட்டதாக அவர்கள் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையப் பாதுகாப்பு உத்தியோகத்தர்களிடம் தெரிவித் துள்ளனர். சுவரொட்டிகள் தோன்றியதற்கும், மற்றும் இராணுவத்தினரின் விஜயத்திற்கும் இடையே ஏதும் தொடர்புகள் உள்ளனவா அல்லது இது வெறுமனே ஒரு தற்செயலான சம்பவமா எனத் தீர்மானிப்பதிலும் மற்றும் நாட்டின் சட்டத்தின் அடிப்படையில் இத்தகைய விசாரணைகளை நடாத்துவதில் எவ்விதம் இராணுவம் ஒரு வகிபாகத்தைக் கொண்டுள்ளது என்பதையும் எம்மால் விளங்கிக் கொள்ள முடியாதுள்ளது.

தனிப்பட்ட ஒருவருக்கு எதிரான நிந்தனை மற்றும் மக்களின் வெறுப்பைத் தூண்டிவிடுதல் என்பவற்றுக்கு அப்பால், இத்தகைய திருப்பங்கள், போருக்குப் பிந்திய எங்களது அரசியல் கலாச்சாரத்தில் நிகழ்கின்றதாகக் காணப்படுகின்ற ஆழமான மாற்றங்களைக் குறித்துக் காட்டுவதையிட்டு நாம் கவலை கொள்கிறோம். அரசாங்கம், சிவில் சமூகத்தைக் கண்டித்தும் மற்றும் அதனிலிருந்து கருத்து வேறுபாட்டை அதிகரித்தளவில் கருதுவதோடு மட்டுமன்றி, தனது அதிகாரத்தின் மீதான ஏதேனும் அரசியலமைப்பு ரீதியான கட்டுப்படுத்தல்களை தனது நிகழ்ச்சிநிரலுக்கு ஏற்புடையதானதல்ல எனவும் மற்றும் ஜனநாயக ரீதியில் ஏதேனும் வடிவிலான கருத்து வேறுபாடுகளைத் தெரிவிக்கும் எதிர்ப்பாளர்களை நாட்டுப்பற்றவர்களாகக் குற்றம் சாட்டுவதை அதன் வழமையான பதிலாகக் கருதுவதையுமே அதிகரித்தளவில் காணக்கூடியதாக உள்ளது. ஜனரஞ்சகம் மற்றும் பெரும்பான்மைவாதம் என்பன மட்டுமே சட்டபூர்வமான அம்சங்கள் மற்றும் ஜனநாயக வடிவங்கள் என அது கருதக் காணப்படுகின்றதுடன், ஜனநாயகம் மீதான அத்தகைய கண்ணோட்டங்கள், மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் ஒரு ஸ்தாபிக்கப்பட்ட கோட்பாடுகளுடன் நேரடியாகவே முரண்படுகின்றது என்பதை இங்கு நாம் வலியுறுத்துவதற்கு வேண்டியதில்லை.

அரசியலமைப்பு ரீதியான கட்டுப்பாடுகள், கட்டுப்பாடுகளும் சமநிலைகளும், சட்டவாட்சி மற்றும் நீதித்துறையின் சுயாதீனம், அடிப்படை உரிமைகள் மற்றும் சிறுபான்மையினர் பாதுகாப்புகள், அதிகாரப் பகிர்வு மற்றும் துடிப்பான மற்றும் ஆராயுந் தன்மை கொண்ட வாக்காளர், ஊடகம் மற்றும் சிவில் சமூகம் என்பவற்றினால் கட்டுப்படுத்தப்பட முடியாத தேர்வு முறையிலான ஜனநாயகத்தின் வடிவங்கள் ஒருபோதும் ஜனநாயகத்தைக் கட்டமைக்கமாட்டாது என நாம் நம்புகிறோம். பொருளாதார அபிவிருத்தி எனக் கருதப்படும் நன்மைகளில் இந்த அடிப்படைக் கோட்பாடுகளின் பொருள்நீக்கம், ஒரு தவறான நிலைமையாவதோடு மட்டுமின்றி, 1931 இலிருந்து வாழ்க்கையின் ஜனநாயக முறையாக நாம் அனுபவித்து வந்த தெரிவு செய்தல் மற்றும் மாற்றம் என்பவற்றின் பாரம்பரியங்களை அழிவுறுத்துவதற்கும் கூடப் பயன் படுவதாகின்றது.

ஜனரஞ்சகமான சர்வாதிகாரத்தைக் கொண்டிருந்த நாடுகள் பலவற்றின் வரலாறுகள் காண்பித்த துரதிர்ஷ்டவசமான அனுபவங்களைப் போன்று, அப்பியாசிக்கும் அரசியல் அதிகாரத்தின் மீதான சட்ட மற்றும் அரசியல் கட்டுப்பாடுகளின் வலுவிழப்பானது, அரசாங்கங்கள் அதிகார மையப்படுத்தல்கள் மற்றும் கட்டுப்பாடுகளின் ஒரு இல்லாமை என்பவற்றை வழக்கமாக்கிக் கொள்ளும்போது, முதல் சந்தர்ப்பத்திலேயே ‘மக்களுக்கானவை’ எனும் வடிவிலானவையாகக் கருதப்படும் கொள்கைகள், விரைவிலேயே மக்களுக்கு எதிரானவையாக மாறுகின்ற ஒரு அச்சமளிக்கும் தன்மை கொண்டவையாக உள்ளன. அரசியலமைப்புகளிலான அண்மைய திரிவுபடுத்தல்கள், பாராளுமன்றம் மற்றும் ஜனநாயகம் ஆகிய இரண்டையும் பலியிட்டு நிறைவேற்று அதிகாரத்தைப் பலப்படுத்துதல், நல்லாட்சியை உறுதிப்படுத்துவதற்காக ஸ்தாபிக்கபட்ட ஏற்பாடுகளைத் தகர்த்தல், அரசியல் எதிர்ப்பாளர்களைக் கையாளும் முறை, ஆர்ப்பாட்டக்காரர்கள், செயற்பாட்டாளர்கள் மற்றும் ஊடகவியலாளர்களுக்கு எதிரான வன்முறை, தன்னிச்சையில்லாத காணமற்போதல்கள், நீதிமுறைமையின் சுயாதீனம் மீதான தாக்குதல்கள், மக்கள் வாழ்க்கையை இராணுவ மயப்படுத்துதல் மற்றும் எங்கும் ஊடுருவியுள்ள குற்றவிலக்களிப்புக் கலாச்சாரம் என்பவற்றின் பின்னணியில், விமர்சனக் குரல்களை அச்சுறுத்துவது மூலமானது உட்பட, எஞ்சியுள்ள சுதந்திரமான ஜனநாயக அமைப்புகள் மற்றும் நியதிகளைச் சீர்குலைப்பதை இலக்காகக் கொண்ட ஒரு செயன்முறை இன்று இலங்கையில் நடைபெற்று வருவதை நாம் காண்கிறோம் என்பதை நாம் உறுதியாகக் கூறுவதற்கு விரும்புகிறோம். எங்களது எதிர்கால ஜனநாயகத்தின் அனர்த்தத்தில் இந்த மாற்றங்கள் இலேசானவையாகவே எடுத்துக் கொள்ளப்படுகின்றது.

இலங்கையில் நல்லாட்சி மற்றும் முரண்பாடுகளின் நிலைமாற்றத்துக்காக அமைப்புகளை வலுப்படுத்துவதற்கும், செயல்திறன்களைக் கட்டியெழுப்புவதற்கும் ஒரு அவசரமான தேவையுள்ளது மற்றும் இந்தச் செயன்முறையில் கட்சிச்சார்பற்ற சிவில் சமூகக் குழுக்கள் முக்கியமானதும் மற்றும் ஆக்கபூர்வமானதுமான பங்களிப்பை அளிப்பதற்கு உள்ளது எனும் ஒரு பலமான நம்பிக்கையின் அடிப்படையிலும் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் ஸ்தாபிக்கப்பட்டது. பொதுக்கொள்கை என்பதன் அடிப்படையில் நிலையத்திற்கு எதிர்பார்க்கப்பட்ட வகிபாகம் வன்முறையற்ற முரண்பாடு தீர்த்தல் மற்றும் ஜனநாய ஆட்சி என்பவற்றுக்கான மாற்றுக் கொள்கையின் பரிந்து பேசுதலை பரப்புரை செய்வதை இலக்காகக் கொண்ட தன்னார்வச் செயற்பாடு மற்றும் இடையீட்டுத் தன்மை கொண்ட ஒன்றாகும். அதற்கமைய, நிலையத்தின் பணிகள் ஒரு பெரும் ஆராய்ச்சி அம்சத்தோடு சம்பந்தப்படுவதுடன், இதனூடாக பரிந்துரைக்கப்படும் மாற்றுக் கொள்கைகள் இனங் காணப்பட்டு விருத்தி செய்யப்படுகின்றன.


இணையதளம் - www.cpalanka.org

முகவிணையம் - www.facebook.com/CPASL

டிவிட்டர் - www.twitter.com/CPA

மின்னஞ்சல் - info@cpalanka.org